**கவனிக்க.-** *2010.04.30 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*
**கவனிக்க.-** *இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியவை சிங்களம் மற்றும் ஆங்கில மொழியில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1653 - 2010 මැයි 07 වැනි සිකුරාදා - 2010.05.07**
*1653 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 830 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களாவன, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனையும் கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2010, மே மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மேல் மாகாண அரசாங்க சேவையின் மாகாண வருமான திணைக்களத்தில் மாகாண வருமான சேவையில் III ஆம் வகுப்பு II ஆம் தரத்தில் வரி உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு செய்தல் போட்டிப்பரீட்சை - 2009

மேல் மாகாண அரசாங்க சேவையின் மாகாண வருமான திணைக்களத்தில் மாகாண வருமான சேவையில் III ஆம் வகுப்பு II ஆம் தரத்தில் வரி உத்தியோகத்தர் பதவிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக கீழ் உள்ள தகைமைகளைப் பெற்றுள்ள பெண்/ஆண் இருபாலார்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **சம்பள அளவுத்திட்டம்.**- அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 (iv) அமைய இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 16,720-10 × 320 - 11 × 365 - 15 × 450 - ரூபா 30,685 ஆகும் (M.N-5-2006 A யின் 1 ஆவது படியாகும்.)

2.2 **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்தன்று 30 வயதிற்கு குறைந்திருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க நிரந்தர சேவையிலுள்ள விண்ணப்ப தாரிகளுக்கான ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதன்று அவர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை தமது திணைக்களத் தலைரின் ஊடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2.3 **சேவை நிபந்தனை.**- அனுமதிக்கப்பட்ட சேவையாப்புக்கு அமைய சேவை நிபந்தனை தீர்மானிக்கப்படும் இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

3. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்.**-

இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு நிறுவனமொன்றில் மத்திய பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் அல்லது இலங்கை தொழிநுட்பக் கல்லூரியில் கணக்கியலில் அல்லது வர்த்தக விஞ்ஞானம் தொடர்பான டிப்ளோமா பாடநெறியின் மத்திய பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்

மற்றும்

கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபடி க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் இடைநிலை மொழியொன்றில் சித்திபெற்றிருத்தல்.

- சிங்களமொழியில் தோற்றும் விண்ணப்பதாரிகள் - தமிழ் அல்லது ஆங்கில பாடத்தில்
- தமிழ் மொழிமூலம் தோற்றும் விண்ணப்பதாரிகள் - சிங்கள அல்லது ஆங்கில பாடத்தில்
- ஆங்கிலம் மொழிமூலம் தோற்றும் விண்ணப்பதாரிகள் - சிங்களம் அல்லது தமிழ் பாடத்தில்

4. **பரீட்சார்த்திகள்.**-

4.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.2 நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

4.3 இப்பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கான உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் பொருத்தமுடையவராக இருத்தல் வேண்டும்.

4.4 விண்ணப்பதாரிகள் மேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்தப்படுவதுடன், விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினமாகிய 2010.05.31 ஆந் திகதியன்று மேல் மாகாணத்தினுள் குறைந்தது 03 வருட காலம் நிரந்தர வதிவிடவாளராக விண்ணப்பதாரி இருந்திருத்தல் வேண்டும். இதற்காக நிரந்தர வதிவிடம் தொடர்பாக பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு முறை.**- காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக் கையைவிடக்கூடிய விண்ணப்பங்கள் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் தெரிவுக்குழுவின் மூலம் குறித்த தகைமைகளைப் பரிசீலனை செய்து பார்த்த பின்னர் ஆட்சேர்ப்பு செய்யப்படும். காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைவிடக்கூடிய விண்ணப்பங்கள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் எழுத்து பரீட்சையின் மூலம் தீர்மானிக்கப் படும். தேர்ச்சியின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். ஆட்சேர்ப்பு செய்யப்படும்போது அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 15/90 ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதாகும். சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் இருவர் அல்லது அதற்கு கூடுதலான எண்ணிக்கையை கொண்டிருப்பின் பொருத்தமானவரை தெரிவு செய்யும் இறுதி தீர்மானம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கே உரியதாகும்.

6. தற்போது கிடைக்கப்பெற்றுள்ள அறிக்கையின்படி வெற்றிடங்கள் மற்றும் போட்டிப் பரீட்சையின் பின்னர் ஏற்படும் வெற்றிடங்கள் என்பன கீழுள்ள பரீட்சையின் 16ஆவது பந்தியில் காட்டப்பட்டுள்ளபடி சித்திபெற்றவர்கள் இருப்பின் அவர்களிலிருந்து வெற்றிடங்களை நிரப்புவது பற்றிய இறுதி தீர்மானம் எடுப்பது மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கே உரியதாகும்.

7. பரீட்சைக் கட்டணமாக ரூபா 350 மாகாண சபை வருமானத்தலைப்பின் 20-03-90-01 இல் வரவு வைக்கும் விதத்தில் அண்மையில் அமைந்துள்ள பிரதேச செயலாளர் காரியாலயத்தில் செலுத்தி பெறப்பட்ட மே. மா. 1 பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்வாறு பணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டைத் தவிர வேறு நிறுவனங்களுக்கு செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டு அல்லது காசுக்கட்டளைகள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் எக்காரணம் கொண்டும் அல்லது செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீள செலுத்தப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

8. **விண்ணப்பிக்கும் முறை.**- 8-1 இவ்வறிவித்தலின் இறுதி யிலுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய A 4 (செ. மீ. 21 × 29) அளவிலான கடதாசியின் இருபக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை 2010.05.31 ஆந் திகதிக்கு முன்பு செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு (மே. மா) சுதந்திர சதுக்கம் கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவம் இடப்பட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "III ஆம் வகுப்பு II ஆம் தர வரி உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்புச் செய்தல்" என குறிப்பிடப்படல் வேண்டும். (தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க நிரந்தர

சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தை சேவைத் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டும்.) தாமதமாகி கிடைக்கப்பெறும் விண்ணபப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பம் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

9. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினம் 2010.05.31 ஆகும்.

10. **ஏனைய நிபந்தனைகள்**.- மேல் மாகாண வருமான திணைக்களத்துக்குரிய கௌரவ ஆணையாளரினால் அங்கீகரிக்கப் பட்ட சேவையாப்பின் சகல நிபந்தனைகளுக்கும் நீர் கீழ்ப்படிதல் வேண்டும்.

11. அறிவித்தலிலுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளவர்கள் மட்டுமே விண்ணபிக்க வேண்டும் என கருதப்படுவதன் அடிப்படையில் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட குறித்த திகதி அல்லது அத்திகதிக்கு முன்பு விண்ணபப்பங்களை சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்ப தாரிகளுக்கும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமை விண்ணப்பதாரிகள் இப்பதவிக்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார்கள் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு உரிய அறிவித்தலுக்கு அமைய தகைமை பெற்றுள்ளாரா என்பதை பரிசீலனை செய்யும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லையென உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களுக்கான நியமனம் கிடைப்பதற்குரிய உரிமை இரத்து செய்யப்படும். சகல விண்ணப்ப தாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் 2010.05.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

12. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும்.

1. ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
2. செல்லுபடியான கடவுச்சீட்டு.

**குறிப்பு**.- பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாள அட்டையை சமர்ப்பிப்பதற்கு தவறும் பட்சத்தில் அவர் தகுதியற்றவராக கருதப்படுவார்.

13. எவராவது பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை பரீட்சை நடைபெறுவதற்கு 07 நாட்களுக்கு முன்பு கிடைக்காவிட்டால் அதுபற்றி உடனடியாக "செயலாளர், மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு (மே. மா.), சுதந்திர சதுக்கம். கொழும்பு 07" என்ற முகவரிக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் சந்தர்ப்பத்தில் பின்வரும் விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும் :-

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(இ) முகவரி ;
(ஈ) விண்ணப்பம் அனுப்பப்பட்ட முகவரி, பதிவுத்தபால் இலக்கம் மற்றும் திகதி.

14. எவராவது பரீட்சார்த்தி ஒருவருக்கு குறிப்பிடப்பட்ட தகைமை இல்லையென நியமனம் பெறுவதற்கு முன்னர் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்து செய்யப்படும். நியமனம் கிடைத்த பின்னர் தெரிந்திருந்தும் பொய்யான தகவல்களை சமர்ப்பித்துள்ளனரென அல்லது பிழையான தகவலை வேண்டுமென்று மறைந்திருத்துள்ளாரென கண்டு பிடிக்கப்பட்டால் அவர் சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

15. விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலிலுள்ள விடயங்கள் அல்லது அவ் அறிவித்தலுக்கு புறம்பான ஏனைய விடயங்கள் தொடர்பாக மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.-

16. **எழுத்துப் பரீட்சை பாடத்திட்டம்**.- இவ் எழுத்து பரீட்சை (இரண்டு) வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும்.-

1. பொது அறிவுப் பரீட்சை (01 மணித்தியாலம்) -100 புள்ளி
2. பொது விவேகப் பரீட்சை (01 மணித்தியாலம்) -100 புள்ளி

தகைமை பெறுவதற்காக குறைந்தபட்சம் ஒவ்வொரு வினாப் பத்திரத்திலும் 40% வீதமும் இரண்டு வினாப்பத்திரத்திலும் சராசரியாக 50% புள்ளிகளைப் பெற வேண்டும்.

வீ. ராஜபக்ஷ,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
மேல் மாகாணம்.

2010.04.19.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**மேல் மாகாண அரசாங்க சேவையின் மாகாண வருமான திணைக்களத்தில் மாகாண வருமான சேவையில் III ஆம் வகுப்பு II ஆம் தரத்தில் வரி உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு செய்தல் போட்டிப் பரீட்சை - 2009**

சுட்டிலக்கம் [ ]

(அலுவலக உபயோகத்திற்கு)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர்:----.

(ஆ) முழுப்பெயர் :----.

(இ) தேசிய அடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | ]

2. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :----.

3. (i) நிரந்தர முகவரி :----.
(ii) நிரந்தர வதிவிட மாவட்டம் : (உரிய கூட்டினுள் (✓) இடவும்.

கொழும்பு [ ] கம்பஹா [ ] களுத்துறை [ ]

(iii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 2010.05.31 அதாவது தினத்தன்று உரிய மாவட்டத்தில் நிரந்தர வதிவிடவாளராக இருந்த காலம் :
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

(iv) தொலைபேசி இலக்கம் பிரத்தியேகம் : .................... கடமை: ......................

4. பால் (ஆண்/பெண்) - (உரிய கூட்டினுள் ( ✓ ) இடவும்

ஆண் ☐ பெண் ☐

5. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :-
(உரிய கூட்டினுள் ( ✓ ) இடவும்.
சிங்களம் ☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐

6. பிறந்த திகதி :----.
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
(i) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதியாகிய 2010.05.31 அன்று :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
(ii) இலங்கை பிரசையாயின் பிறப்பிலா/பதிவுமூலமா?

7. **கல்வித் தகைமைகள் :-**
விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலின் 3 ''அ'' வின் கீழ்-
(அ) (i) பெற்ற பட்டம் :----.
(ii) பட்டம் பெற்ற பல்கலைக்கழகத்தின் பெயர் :----.
(iii) வகுப்பு சித்திபெற்றிருப்பின் அது பற்றிய விபரம் :----.
(iv) பட்டம் செல்லுபடியாகும் திகதி :----.

(ஆ) (i) அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் நிறுவனமொன்றில் மத்திய பரீட்சையில் சித்தி பெற்றுள்ளீரா? :----.
(ii) அவ்வாறெனின் திகதி :----.

(இ) (i) இலங்கை தொழிநுட்பக் கல்லூரியில் கணக்கியல் தொடர்பான டிப்ளோமா பாடநெறியின் மத்திய பரீட்சையில் சித்திபெற்றுள்ளீரா? :----.
(ii) அவ்வாறெனின் திகதி :----.

(ஈ) (i) இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் வர்த்தக விஞ்ஞானம் தொடர்பான டிப்ளோமா பாடநெறியின் மத்திய பரீட்சையில் சித்தி பெற்றுள்ளீரா? :----.
(ii) அவ்வாறெனின் திகதி :----.

(உ) (i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்திபெற்றுள்ள இடைநிலைமொழி :----.
(ii) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டு :----.
(iii) பரீட்சை இலக்கம் :----.
(iv) பெற்ற திகதி :----.

(இந்த தகவல்கள் தெளிவாகவும் மற்றும் சரியாகவும் குறிப்பிடப் படாமலிருந்தால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.)

8. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம் :----.

திகதி :----.

| பற்றுச்சீட்டை இக்கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிடவும். |
|---|

9. .................................. ஆகிய என்னால் இவ்விண்ணப்பத்தில் கூறப்பட்ட தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ற வகையில் உண்மையானவையும், சரியானவையும் என சான்றுப்படுத்துகின்றேன். என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானது என உறுதிப்படுத்தப்பட்டால், மாகாண வருமான சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் வரி உத்தியோகத்தர் பதவிக்கு நியமிப்ப தற்காகவுள்ள எனது உரிமை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு உள்ளாக்கப்படுவேன் என்பதை நான் அறிந்துள்ளேன்.

---------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

(தேவையற்ற வாக்கியங்களை வெட்டிவிடவும்)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ........................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் அவர் எனது முன்னிலையில் .......... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.
கையொப்பம் :----.
பதவி மற்றும் உத்தியோக முத்திரை :----.

(இச்சான்றுப்படுத்தல் அரசாங்கப் பாடசாலையின் அதிபர் ஒருவரினால்/சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/இராணுவப்படை அல்லது விமானப்படையில் அதிகாரம் பெற்றுள்ள அதிகாரி ஒருவர் அல்லது வருடாந்தம் ரூபா 2,37,060 க்கும் குறையாத ஒன்று திரட்டப்பட்ட சம்பளத்தைப்பெறும் நிரந்தர சேவையை வகிக்கும் அரசாங்க/ மாகாண அரசாங்க சேவை உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தல் வேண்டும்.

**அரசாங்கம் அல்லது மாகாண அரசாங்க சேவையில் தற்போது சேவையிலீடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கான திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(தேவையற்ற விடயங்களை வெட்டிவிடவும்)

திரு./ திருமதி/ செல்வி ............................................................... தற்போது ..................................................................... அமைச்சில் ................................................./ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ............................. ஆக நிரந்தர சேவையில் கடமை புரிகின்றார் என்றும் அவரது சேவை திருப்திகரமானதாகும்/ அவர் அரசாங்க சேவையில் நீக்கப்படுவதற்கு அல்லது கருணை காட்டப்பட்டு மாற்றீடாக வினைத்திறனற்றவராக காணப்படுகின்றார் என்ற அடிப்படையில் ஓய்வு

பெற்றுள்ளார்/இல்லை என்றும் பதவியிலிருந்து தானாக விலகிச் சென்றுள்ளார் என கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளார்/இல்லை என்றும் மேலே கூறப்பட்ட தகவல்கள் சரியானது என சான்றுப்படுத்துவதுடன் இப்பரீட்சையின் பெறுபேற்றுக்கு அமைய நியமனத்திற்காக அவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிப்பு செய்ய முடியும்/முடியாது என தெரிவித்துக்கொள்கின்றேன்.

-----,
திணைக்களத்தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை)

திகதி :----.

5-143/1

---

**மேல் மாகாண அரசாங்க சேவையின் மாகாண வருமான திணைக்களத்தில் மாகாண வருமான சேவையில் II ஆம் வகுப்பு II ஆம் தரத்தில் மாகாண மதிப்பீட்டாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு செய்தலுக்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2009**

மேல் மாகாண அரசாங்க சேவையின் மாகாண வருமான திணைக்களத்தில் மாகாண வருமான சேவையில் II ஆம் வகுப்பு II ஆம் தரத்தின் மாகாண மதிப்பீட்டாளர் பதவிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக கீழ் உள்ள தகைமைகளைப் பெற்றுள்ள ஆண் /பெண் இருபாலார்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. 2.1 அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இல் இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 22,935-10 × 645 - 8 × 790 - 17 × 1,050 - 53,555 ஆகும் (SL-1-2-2006 யின் 1 ஆவது படியாகும்.)

2.2 **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்தன்று வயது வருடம் 30 க்கு குறைந்திருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க/ மாகாண அரசாங்க நிரந்தர சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கான ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதன்று அவர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை தமது திணைக்களத் தலைரின் ஊடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2.3 **சேவை நிபந்தனை**.- அனுமதிக்கப்பட்ட சேவையாப்புக்கு அமைய சேவை நிபந்தனை தீர்மானிக்கப்படும். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

3. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்** :

இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் முதலாம் தர அல்லது இரண்டாம் தர பட்டத்துடனான பட்டதாரி

அல்லது

சட்டத்தரணி, அங்கீகாரம் பெற்ற அல்லது இணைந்த அல்லது பதிவு செய்யப்பட்ட கணக்காளர்

அல்லது

மாகாண வருமான சேவையில் 03 வருட சேவைக் காலத்தையுடைய, சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ள III ஆம் வகுப்பு II ஆம் தர வரி உத்தியோகத்தர்.

அல்லது

மாகாண வருமான சேவையில் III ஆம் வகுப்பின் I ஆம் தர சிரேஷ்ட உத்தியோகத்தர் அல்லது மாகாண வருமான திணைக்களத்தில் 03 வருடங்களுக்கு குறையாத சேவை காலத்தையுடைய மற்றும் சேவை நிரந்தரம் செய்யப் பட்டுள்ளதும் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மொன்றில் பட்டம் பெற்ற பட்டதாரி அல்லது சட்டத்தரணி உத்தியோகத்தர் (கௌரவ ஆளுநரினால் புதிய சேவை வாய்ப்பு அனுமதிக்கப்பட்டுள்ள 2009.04.07 ஆந் திகதியில் மாகாண வருமான திணைக்களத்தில் சேவையில் ஈடு பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு மேலுள்ள சேவைக்காலம் கவனத்தில் கொள்ளப்படாததுடன் தற்போது காணப்படும் சேவையாப்புக்கு அமைய உள்ள உரிமை அப்பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகுதி உரிமையைக் கொண்டிருக்கும்.)

மற்றும்

கீழே காட்டப்பட்டுள்ளபடி க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இடைநிலை மொழியொன்றில் சித்திபெற்றிருத்தல்.

- சிங்களமொழியில் தோற்றும் விண்ணப்பதாரிகள் - தமிழ் அல்லது ஆங்கில பாடத்தில்
- தமிழ் மொழிமூலம் தோற்றும் விண்ணப்பதாரிகள் - சிங்கள அல்லது ஆங்கில பாடத்தில்
- ஆங்கிலம் மொழிமூலம் தோற்றும் விண்ணப்பதாரிகள் - சிங்களம் அல்லது தமிழ் பாடத்தில்

4. பரீட்சார்த்திகள் -

4.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.2 நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

4.3 இப்பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கான உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் பொருத்தமுடையவராக இருத்தல் வேண்டும்.

4.4 விண்ணப்பதாரிகள் மேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்தப்படுவதுடன், விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினமாகிய 2010.05.31 ஆந் திகதியன்று மேல் மாகாணத்தினுள் குறைந்தது 03 வருட காலம் நிரந்தர வதிவிடவாளராக விண்ணப்பதாரி இருந்திருத்தல் வேண்டும். இதற்காக நிரந்தர வதிவிடம் தொடர்பாக பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு முறை**.- காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக் கையைத்தாண்டி விண்ணப்பங்கள் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் தெரிவுக்குழுவின் மூலம் குறித்த தகைமைகளைப் பரிசீலனை செய்து பார்த்த பின்னர் ஆட்சேர்ப்பு செய்யப்படும். காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைத்தாண்டி விண்ணப்பங்கள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் எழுத்து பரீட்சையின் மூலம் தீர்மானிக்கப்படும். தேர்ச்சியின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். ஆட்சேர்ப்பு செய்யப்படும்போது அரசாங்க நிருவாக

சுற்றறிக்கை இலக்கம் 15/90 ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதாகும். சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் இருவர் அல்லது அதற்கு கூடுதலான எண்ணிக்கையை கொண்டிருப்பின் பொருத்தமானவரை தெரிவு செய்யும் இறுதி தீர்மானம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கே உரியதாகும்.

6. தற்போது கிடைக்கப்பெற்றுள்ள அறிக்கையின்படி வெற்றிடங்கள் நிரப்புதல் மற்றும் போட்டிப் பரீட்சையின் பின்னர் ஏற்படும் வெற்றிடங்கள் என்பன கீழுள்ள பரீட்சையின் 16 ஆவது பந்தியில் காட்டப்பட்டுள்ளபடி சித்திபெற்றவர்கள் இருப்பின் அவர்களிலிருந்து வெற்றிடங்களை நிரப்புவது பற்றிய இறுதி தீர்மானம் எடுப்பது மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கே உரியதாகும்.

7. பரீட்சைக் கட்டணமாக ரூபா 350 மாகாண சபை வருமானத் தலைப்பின் 20-03-90-01 இல் வரவு வைக்கும் விதத்தில் அண்மையில் அமைந்துள்ள பிரதேச செயலாளர் காரியாலயத்தில் செலுத்தி பெறப்பட்ட மே. மா. 1 பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்வாறு பணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டைத் தவிர வேறு நிறுவனங்களுக்கு செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டு அல்லது காசுக்கட்டளைகள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் எக்காரணம் கொண்டும் அல்லது செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீள செலுத்தப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

8. **விண்ணப்பிக்கும் முறை**.- 8-1 இவ்வறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய A 4 (செ. மீ. 21 × 29) அளவிலான கடதாசியின் இருபக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை 2010.05.31 ஆந் திகதிக்கு முன்பு "செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு (மே. மா) சுதந்திர சதுக்கம் கொழும்பு 07" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவம் இடப்பட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "II ஆம் வகுப்பு II ஆம் தர வரி உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்புச் செய்தல்" என குறிப்பிடப்படல் வேண்டும். (தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க நிரந்தர சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவத்தை சேவைத் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டும்.) தாமதமாகி கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பம் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

9. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினம் 2010.05.31 ஆகும்.

10. **ஏனைய நிபந்தனைகள்**.- மேல் மாகாண வருமான திணைக்களத்துக்குரிய கௌரவ ஆளுனரினால் அங்கீகரிக்கப் பட்ட சேவையாப்பின் சகல நிபந்தனைகளுக்கும் நீர் கீழ்ப்படிதல் வேண்டும்.

11. அறிவித்தலிலுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும் என கருதப்படுவதன் அடிப்படையில் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட குறித்த திகதி அல்லது அத்திகதிக்கு முன்பு விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்ப தாரிகளுக்கும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமை விண்ணப்பதாரிகள் இப்பதவிக்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார்கள் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு உரிய அறிவித்தலுக்கு அமைய தகைமை பெற்றுள்ளாரா என்பதை பரிசீலனை செய்யும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லையென உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களுக்கான நியமனம் கிடைப்பதற்குரிய உரிமை இரத்து செய்யப்படும். சகல விண்ணப்ப தாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் 2010.05.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

12. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும்.

1. ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
2. செல்லுபடியான கடவுச்சீட்டு.

**குறிப்பு**.- பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாள அட்டையை சமர்ப்பிப்பதற்கு தவறும் பட்சத்தில் அவர் தகுதியற்றவராக கருதப்படுவார்.

13. எவராவது பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை பரீட்சை நடைபெறுவதற்கு 07 நாட்களுக்கு முன்பு கிடைக்காவிட்டால் அதுபற்றி உடனடியாக "செயலாளர் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு (மே. மா.) சுதந்திர சதுக்கம். கொழும்பு 07" என்ற முகவரிக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் சந்தர்ப்பத்தில் பின்வரும் விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும் :-

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(இ) முகவரி ;
(ஈ) விண்ணப்பம் அனுப்பப்பட்ட முகவரி, பதிவுத்தபால் இலக்கம் மற்றும் திகதி.

14. எவராவது பரீட்சார்த்தி ஒருவருக்கு குறிப்பிடப்பட்ட தகைமை இல்லையென நியமனம் பெறுவதற்கு முன்னர் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்து செய்யப்படும். நியமனம் கிடைத்த பின்னர் அல்லது தெரிந்திருந்தும் பொய்யான தகவல்களை சமர்ப்பித்துள்ளனர் அல்லது பிழையான தகவலை வேண்டுமென்று மறைந்தார் என கண்டு பிடிக்கப்பட்டால் அவர் சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

15. விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலிலுள்ள விடயங்கள் அல்லது அவ் அறிவித்தலுக்கு புறம்பான ஏனைய விடயங்கள் தொடர்பாக மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

16. **எழுத்துப் பரீட்சை பாடத்திட்டம்**.- இவ் எழுத்து பரீட்சை (மூன்று) வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும்.

1. பொது உளச்சார்புப் பரீட்சை 01 மணித்தியாலம் 100 புள்ளி
2. பொது அறிவுப் பரீட்சை 01 மணித்தியாலம் 100 புள்ளி
3. பொது விவேகப் பரீட்சை 01 மணித்தியாலம் 100 புள்ளி

தகைமை பெறுவதற்காக குறைந்த பட்சம் ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% புள்ளிகளும், வினாப்பத்திரம் மூன்றிற்காக சராசரியாக 50% புள்ளிகளும் பெற வேண்டும்.

வீ. ராஜபக்ஷ,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
மேல் மாகாணம்.

2010.04.19.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**மேல் மாகாண அரசாங்க சேவையின் மாகாண வருமான திணைக்களத்தில் மாகாண வருமான சேவையில் II ஆம் வகுப்பு II ஆம் தரத்தின் மாகாண மதிப்பீட்டாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு செய்தலுக்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2009**

சுட்டிலக்கம் [ ]

(அலுவலக உபயோகத்திற்கு)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர்:----.

(ஆ) முழுப்பெயர் :----.

(இ) தேசிய அடையாள அட்டை இலக்கம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

2. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :----.

3. (i) நிரந்தர முகவரி :----.
(ii) நிரந்தர வதிவிட மாவட்டம் : (உரிய கூட்டினுள் (✓) இடவும்

கொழும்பு [ ] கம்பஹா [ ] களுத்துறை [ ]

(iii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 2010.05.31 அத்தினத்தில் உரிய மாவட்டத்தில் நிரந்தர வதிவிடவாளராக வசித்த காலம் :
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

(iv) தொலைபேசி இலக்கம் பிரத்தியோகம் : ...................
கடமை : .....................

4. பால் (ஆண்/பெண்) - (உரிய கூட்டினுள் ( ✓ ) இடவும்.

ஆண் [ ] பெண் [ ]

5. பரீட்சைக்குத் தோற்றும் மொழி :- (உரிய கூட்டினுள் ( ✓ ) இடவும்
சிங்களம் [ ] தமிழ் [ ] ஆங்கிலம் [ ]

6. பிறந்த திகதி :----.
வருடம் :----, மாதம் :----, திகதி :----.
(i) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதி 2010.05.31 அன்று வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
(ii) இலங்கை பிரசையாயின் பிறப்பிலா/பதிவுமூலமா?

7. கல்வித்தகைமை :-

(அ) (i) பெற்ற பட்டம் :----.
(ii) பட்டம் பெற்ற பல்கலைக்கழகத்தின் பெயர் :----.
(iii) வகுப்பு சித்திபெற்றிருப்பின் அது பற்றிய விபரம் :----.
(iv) பட்டம் செல்லுபடியாகும் திகதி :----.

(ஆ) (i) நீர் சட்டத்தரணியா/ அங்கீகாரம் பெற்ற அல்லது இணைந்த அல்லது பதிவு செய்யப்பட்ட கணக்காளரா விபரம் ? :----.

(இ) (i) மாகாண வருமான சேவையில் III/II வரி உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
(ii) நியமனம் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.
(iii) மாகாண வருமான சேவையில் III/I சிரேஷ்ட வரி உத்தியோகத்தர் பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.
(iv) மாகாண வருமான சேவையில் 03 ஆண்டுகள் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள திகதி :----.

(ஈ) (i) மேல் மாகாண வருமான திணைக்களத்தில் வகிக்கும்/ வகித்த பதவி :----.
(ii) அப்பதவி நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.
(iii) மேல் மாகாண வருமான திணைக்களத்தில் சேவையாற்றிய காலம் :----.
----- தொடக்கம் ---- வரை
(iv) தற்போதைய சேவை நிலையம் :----.

(உ) (i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்திபெற்றுள்ள இடைநிலைமொழி :----.
(ii) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டு :----.
(iii) பரீட்சை இலக்கம் :----.
(iv) பெற்ற திகதி :----.

இந்த தகவல்கள் தெளிவாகவும் மற்றும் சரியாகவும் குறிப்பிடப்படாமலிருந்தால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

8. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம் :----.

திகதி :----.

பற்றுச்சீட்டு பெறப்பட்ட பிரதேச செயலாளர் காரியாலயம் :----.

| பற்றுச்சீட்டை இக்கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிடவும். |
|---|

9. .................................. ஆகிய என்னால் இவ்விண்ணப்பத்தில் கூறப்பட்ட தகவல்கள் எனது அறிவுக்கும் மற்றும் உண்மை தன்மைக்கும் ஏற்ற வகையில் உண்மையானவையும், சரியானவையும் என சான்றுப்படுத்துகின்றேன். என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானது என உறுதிப்படுத்தப்பட்டால், மாகாண வருமான சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் வரி உத்தியோகத்தர் பதவிக்கு நியமிப்பதற்காகவுள்ள எனது உரிமை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு உள்ளாக்கப்படுவேன் என்பதை நான் அறிந்துள்ளேன்.

---------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

(தேவையற்ற வாக்கியங்களை வெட்டிவிடவும்)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் அவர் எனது முன்னிலையில் .......... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.

கையொப்பம் :----.

பதவி மற்றும் உத்தியோக முத்திரை :----.

(இச்சான்றுப்படுத்தல் அரசாங்கப் பாடசாலையின் அதிபர் ஒருவரினால்/சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/இராணுவப்படை அல்லது விமானப்படையில் அதிகாரம் பெற்றுள்ள அதிகாரி ஒருவர் அல்லது வருடாந்தம் ரூபா 2,37,060 க்கும் குறையாத ஒன்று திரட்டப்பட்ட சம்பளத்தைப்பெறும் நிரந்தர சேவையை வகிக்கும் அரசாங்க/ மாகாண அரசாங்க சேவை உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தல் வேண்டும்.

**அரசாங்கம் அல்லது மாகாண அரசாங்க சேவையில் தற்போது சேவையிலீடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கான திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(தேவையற்ற விடயங்களை வெட்டிவிடவும்)

திரு./ திருமதி/ செல்வி ............................................................... தற்போது .......................................... அமைச்சில் ...................................../ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ............................. ஆக நிரந்தர சேவையில் கடமை புரிகின்றார் என்றும் அவரது சேவை திருப்திகரமானதாகும்/ அவர் அரசாங்க சேவையில் நீக்கப்படுவதற்கு அல்லது கருணை காட்டப்பட்டு மாற்றீடாக வினைத்திறனற்றவராக காணப்படுகின்றார் என்ற அடிப்படையில் ஓய்வு பெற்றுள்ளார்/ இல்லை என்றும் பதவியிலிருந்து தானாக விலகிச் சென்றுள்ளார் என கவனத்தில்கொள்ளப்பட்டுள்ளார்/ இல்லை என்றும் மேலே கூறப்பட்ட தகவல்கள் சரியானது என சான்றுப்படுத்துவதுடன் இப்பரீட்சையின் பெறுபேற்றுக்கு அமைய நியமனத்திற்காக அவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிப்பு செய்ய முடியும்/ முடியாது என தெரிவித்துக்கொள்கின்றேன்.

-----,
திணைக்களத்தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை)

திகதி :----.

5-143/ 2

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2010 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத் திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை-2010**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | .. | வெள்ளி | 07.05.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.04.2010 |
| | | வெள்ளி | 14.05.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.04.2010 |
| | | வெள்ளி | 21.05.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.05.2010 |
| | | புதன் | 26.05.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.05.2010 |
| **யூன்** | .. | வெள்ளி | 04.06.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.05.2010 |
| | | வெள்ளி | 11.06.2010 | .. | நண்பகல் 12 | புதன் | 26.05.2010 |
| | | வெள்ளி | 18.06.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.06.2010 |
| | | வியாழன் | 24.06.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.06.2010 |
| **யூலை** | .. | வெள்ளி | 02.07.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.06.2010 |
| | | வெள்ளி | 09.07.2010 | .. | நண்பகல் 12 | வியாழன் | 24.06.2010 |
| | | வெள்ளி | 16.07.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.07.2010 |
| | | வெள்ளி | 23.07.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.07.2010 |
| | | வெள்ளி | 30.07.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.07.2010 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*